# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2297/54 – 2022 සැප්තැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.09.15

**2297/54 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் J/204 ஏழாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ஏழாலை கிராமத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லையில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.02.24 ஆந் திகதிய Ya/UDV/ 2020/207 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் துண்டு A எனக் காட்டப்பட்ட சுமார் 0.0257 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு :

**1. துண்டு ‘A’ - கொக்கனும் சோங்கலையும் அல்லது கொக்கனும் சமூகக்கலையும் - விஸ்தீரணம்: 0.0257 ஹெக்டயார்**

வடக்கு: கொக்கனும் சோங்கலையும் அல்லது கொக்கனும் சமூகக்கலையும் மகாதேவன் தனபாலதேவி உரிமை கோரும் காணி; கிழக்கு: கொக்கனும் சோங்கலையும் அல்லது கொக்கனும் சமூகக்கலையும், மகாதேவன் தனபாலதேவி உரிமை கோரும் காணி, வீதியும் (பிரதேச சபை) பாதையும்; தெற்கு: வீதி (பிரதேச சபை) பாதையும், கொக்கனும் சோங்கலையும் அல்லது கொக்கனும் சமூகக்கலையும், மகாதேவன் தனபாலதேவி உரிமை கோரும் காணி; மேற்கு: கொக்கனும் சோங்கலையும் அல்லது கொக்கனும் சமூகக்கலையும், தனபாலதேவி உரிமை கோரும் காணி.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

அமைச்சு குறிப்பு இல. : 4-3/5/2019/HA/610.
பி. செ. குறிப்பு இல. : J/DS/VS/LB/ACQ/S.P/204.
சுற்றுலாத்துறை மற்றும் காணி
சுற்றுலா மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம், 1200/6,
இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2022, செத்தெம்பர் 05.

EOG 09 - 0082